
விலை: 50.00
பக்கங்கள் - 12
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 320 வள்ளுவர் ஆண்டு 2056 ஐப்பசி 18 செவ்வாய்க்கிழமை (04.11.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## செம்மணிப் புதைகுழிக்குள் வெள்ளம்

# அடுத்த வருடமே அகழ்வுப் பணிகள்

### நீதிவான் தலைமையிலான குழு நேரில் கள ஆய்வு



(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதை குழிக்குள் மழைநீர் தேங்கி நிற்பதனால் அடுத்த வருடமே மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படும் எனத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

(11ஆம் பக்கம் பார்க்க)



## இந்தியா பயணமானார் சஜித் பிரேமதாஸ

(கொழும்பு)

இந்திய அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று இந்தியாவிற்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டுள்ளார்.

குறித்த மூன்று நாள் விஜயத்தின்போது, எதிர்க்கட்சித் தலைவர்

11ஆம் பக்கம் பார்க்க

### யாழில் பெண் இராணுவச் சிப்பாயிடம்

## கைப்பை திருடியவர் ஐஸ் போதையுடன் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தில் பேருந்துக்காகக் காத்திருந்த இராணுவப் பெண் சிப்பாய் ஒருவரின் கைப்பையைத் திருடிய சந்தேக நபரை

11ஆம் பக்கம் பார்க்க

### கொக்குவில் குளப்பிட்டியில்

## ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்ட பெண் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கொக்குவிலில் ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்டு வந்த குற்றச்சாட்டில் பெண்ணொருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொக்குவில் குளப்பிட்டி சந்திக்கு அருகில் பெண்ணொருவர் ஹெரோயின் விற்பனையில் ஈடுபடுவதாகப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்

11ஆம் பக்கம் பார்க்க

## செம்மணியில் மீட்கப்பட்ட காலணி 1995ஆம் ஆண்டு காலத்துக்கு முற்பட்டது

### அதில் 39 ரூபாய் 90 சதம் என விலை அச்சிடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட காலணி ஒன்று தொடர்பில் ஆராயப்பட்டதில் அது 1995 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கு முற்பட்டது எனக் கண்டறியப்பட்டுள்ளதாகச் சட்டத்தரணி நிரஞ்சன் தெரிவித்துள்ளார்.

செம்மணி மனிதப் புதைகுழியை நேற்று தினம் திங்கட்கிழமை நேரில் பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

செம்மணிப் புதை

02ஆம் பக்கம் பார்க்க

### யாழ்.பல்கலையில் மீட்கப்பட்ட ஆயுதங்கள்

## யுத்த காலத்திலிருந்தே அங்கு மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம்

### பொலிஸ் ஊடகப் பேச்சாளர் வூட்லர்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகள் யுத்தக் காலத்தில் இருந்தே அங்கு இருந்திருக்கலாம் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எவ்.யூ.வூட்லர் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகத்தின் நூல

11ஆம் பக்கம் பார்க்க

## ஐஸ் போதைப்பொருளுடன் யாழில் 6 பேர் கைது

### ஒருவர் வழிப்பறியில் ஈடுபடுபவர்; இரு மோ.சைக்கிள்களும் மீட்பு



11ஆம் பக்கம் பார்க்க

## தெல்லிப்பழையில் விபத்து; ஒருவர் உயிரிழப்பு



(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழைச் சந்தியில் நேற்றிரவு இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் தெல்லிப்பழை வீட்டுத் திட்டப் பகுதியைச் சேர்ந்த வசந்தன் (வயது-30) என்பவரே உயிரிழந்தவராவார்.

நெல் வெட்

11ஆம் பக்கம் பார்க்க

## தருமபுரத்தில் 42 பேர் கைது

(கிளிநொச்சி)

தருமபுரம் பொலிஸ் பிரிவில் நேற்று 42 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.


நீதிமன்றின் மூலம் பிடியாணை பிறப்பிக்கப்பட்டு சமுகமளிக்காத 42 பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

11ஆம் பக்கம் பார்க்க

### காணி அபகரிப்புத் தொடர்பில்

## முன்னைய ஆட்சியாளர்களின் மனோநிலையில் அநுர அரசு

### நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்



(யாழ்ப்பாணம்)

இன்றைய அநுர அரசாங்கம் காணி அபகரிப்புத் தொடர்பில் முன்னைய ஆட்சியாளர்களின் அதே மனோநிலையில் இருப்பதாகவே தென்படுகிறது என முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

02ஆம் பக்கம் பார்க்க

### நடுவு நிலை தவறாது நன்மை காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## முன்னைய...

அவர் நேற்று வெளியிட்ட ஊடக அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடக்கு மாகாணத்தில் 65,000 ஏக்கர் அரச காணி இன்னமும் படையினரால் கையகப்படுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன.

மிகக் குறைந்த தனியார் காணிகளே இன்றைய அரசாங்கத்தால் அவற்றின் சொந்தக்காரர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன.

அரச திணைக்களங்கள் வடக்கு மாகாண காணிகளைக் கையேற்க ஆயத்தமாகிக் கொண்டிருக்கின்றன.

அதேபோன்று ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு ஆளான பலர் சம்பந்தமாக அரசாங்கம் நீதிமுறை நடவடிக்கைளில் இறங்கியுள்ளமை வரவேற்கத்தக்கது.

அவர்கள் மேற்கொள்ளும் நல்ல நடவடிக்கைகளை நாம் பாராட்டித்தான் ஆகவேண்டும். அதேவேளை எமக்கு எதிரான அவர்களின் செயற்பாடுகளையும் நாம் அச்சம் இல்லாமல் சுட்டிக்காட்டத்தான் வேண்டும் குறிப்பாக பூர்வீகக் குடிகளான எமக்கு நாம் இழந்த எமது தன்னாட்சி அதிகாரங்களை மீள வழங்குவதில் ஏனைய எல்லாக் கட்சிகளையும் விட மிகவும் இனரீதியான சிந்தனையுடனும் அறிவு பூர்வமற்ற விதத்திலும் இந்த அரசாங்கம் செயற்படுகின்றது என்று குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## செம்மணியில்...

குழியில் இருந்து காலணி ஒன்று மீட்கப்பட்டது. அதில் 39ரூபாய் 90 சதம் என விலை காணப்பட்டது. அதன் அடிப்படையில் குறித்த காலணி நிறுவனத்திடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் அக்காலணி 1985 ஆம் ஆண்டு - 1995 ஆம் ஆண்டு காலப் பகுதியில் சந்தையில் விற்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் அது 1995 ஆம் ஆண்டுக்கு முற்பட்டதாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

அதேவேளை இரண்டு கட்டமாக மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணிகளின் போது மீட்கப்பட்ட 239 என்புக்கூட்டு எச்சங்களையும் ஆய்வு செய்வதற்கான செலவீனப் பாதீட்டு அறிக்கை சட்ட வைத்தியர் அதிகாரியினால் தயாரிக்கப்பட்டுள்ளது.

அது மன்றில் சமர்ப்பிக்கப்பட்டு அதற்கான ஒப்புதல் கிடைக்கப்பெற்று நிதி ஒதுக்கப்பட்டதும் அதன் பணிகள் ஆரம்பிக்கப்படும்.

என்புக்கூடுகளை ஆராய்வதற்கு அகழ்வுப் பணியில் கடமையாற்றி வந்த சட்ட வைத்திய அதிகாரி செல்லையா பிரணவன், யாழ்.போதனா வைத்திய சாலை சட்ட வைத்திய அதிகாரி மயூரதன் உள்ளடங்கலாக கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி உள்ளிட்ட புதைகுழிகளில் மீட்கப்பட்ட மனித என்புக்கூடுகளை ஆய்வு செய்த நிபுணர்கள் உள்ளிட்டோர் அடங்கிய 07 பேரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளநிலையில் அதற்கான அனுமதிகள் கிடைக்கப்பெற்றதும் பணிகள் முன்னெடுக்கப்படும் என மேலும் தெரிவித்தார். (ம-7,33)


### பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி றஜிதா தனேஸ்குமார்
SLTES III
[B.A (Hons), PGDE (Merit), MEd]

யா/நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் உதவி அதிபராகப் பணியாற்றி பதவி உயர்வு பெற்று ஆசிரியர் கல்வியியலாளர் சேவையில் வவுனியா கல்வியியற் கல்லூரிக்கு ஆசிரியர் கல்வியியலாளராக நியமனம் பெற்றுச் சென்ற திருமதி றஜிதா தனேஸ்குமாரைப் பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் பல பதவி உயர்வுகள் பெற வாழ்த்துகின்றோம்.

Congratulations!

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/நாவாந்துறை
றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்

(5809)


### அந்தியேட்டி சபிண்டிகரண அழைப்பு



கடந்த 06.10.2025 அன்று சிவபதமடைந்த

**அமரர் கேந்திரநாதன் ஜெயந்தி**


அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 5.11.2025 புதன்கிழமை அதிகாலை 5 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக்கரையில் கரைக்கப்படும். அதனைத் தொடர்ந்து காலை 11.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பெரியார் பகுதி
அல்வாய் கிழக்கு அல்வாய்.

(C-4250)

இங்ஙனம்:- குடும்பத்தினர்
0768448902

# மரண அறிவித்தல்



பிறப்பு 11.10.1941
இறப்பு 01.11.2025

## பிள்ளையினார் சுப்பிரமணியம்

சங்கானை நிற்சாமத்தைப் பிறப்பிடமாகவும், பாரதி வீதி கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் உடுவில் பிரதேச செயலகத்தின் ஓய்வுபெற்ற உத்தியோகத்தருமான பிள்ளையினார் சுப்பிரமணியம் அவர்கள் கடந்த சனிக்கிழமை (01.11.2025) அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிள்ளையினார் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நாகமுத்து - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் நாகேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான நல்லம்மா, சிவராஜா, ரவீந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான முத்துப்பிள்ளை, நடராஜா, துரையன், மார்க்கண்டு மற்றும் கௌரியம்மா, சிவஞானம், திசைவீரசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் அமரசேகர், ஞானசேகரன், கவிதா மற்றும் ரஞ்சித் ஆகியோரின் அன்புத் தந்தையும் பமிலா, கோமதி, காலஞ்சென்ற அன்பழகன், தர்சிகா ஆகியோரின் மாமனாரும் டெனுசன், அனுராகன், ஜெஷ்வின், கவிநயன், அகீஷ், சாருகானன், சியாமா, அக்ஷரா ஆகியோரின் அன்புப் பாட்டனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (04.11.2025) செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காரைக்கால் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

அமரசேகர் - 0033 6512 52647 (பிரான்ஸ்)
ஞானசேகரன் - 0044 7736 3552 09 (U.K)
கவிதா - 076 426 6092
ரஞ்சித் - 001 (516) 214 - 3217 (USA)
சிவஞானம் - 077 008 4011

தகவல் :
குடும்பத்தினர்
பாரதி வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

(5808)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பரீட்சை எழுதுவதற்கான சூழலை ஏற்படுத்திக் கொடுக்குமாறு அறிவுறுத்து!

**(கொழும்பு)**

**உயர்தரப் பரீட்சைக்கு மாணவர்கள் அமைதியாக முகங்கொடுக்கத் தேவையான சூழலை அமைத்துக்கொடுக்குமாறு பெற்றோர்களிடம் கோரிக்கை விடுப்பதாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ஏ. கே. எஸ். இந்திகா குமாரி லியனகே தெரிவித்துள்ளார்.**

அத்துடன் மாணவர்களை நல்ல மனநிலையுடன் பரீட்சைக்கு தயார்ப்படுத்துமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

கல்வி பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை இம் மாதம் 10 ஆம் திகதி முதல், டிசம்பர் மாதம் 5ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

நாடு முழுவதும் 2,362 பரீட்சை நிலையங்களில் உயர்தரப் பரீட்சையை நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தற்போது தயார் செய்யப்பட்டுள்ளதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

இந்த முறை பரீட்சைக்காகப் பாடசாலை விண்ணப்பதாரர்கள் 246.521 பேரும், தனிப்பட்ட விண்ணப்பதாரர்கள் 94 004 பேரும் தோற்றவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வினாத்தாள்களில் எந்த மாற்றமும் இல்லை என்றும் கடந்த வருடத்தைப் போலவே தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, மாணவர்கள், தமக்கு வழங்கப்பட்டுள்ள நேர அட்டவணைக்கு அமையப் பரீட்சைக்கு நன்கு தயாராகுமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்குச் சென்று அதனைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# அரச வேலைக்காக 60 ஆயிரம் பணியாளர்கள் ஆட்சேர்ப்பு

## அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவிப்பு

(கொழும்பு)

அரச வேலைக்காக 60,000 ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்ய எதிர்பார்த்துள்ளதாக பொது நிர்வாகம், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த ஆட்சேர்ப்பிற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் முதல் கட்டமாக, நாடு தழுவிய சேவைகளுக்கான பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்யும் பணிகள் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளன.

பொது சேவைக்கான ஆட்சேர்ப்பு முறையான நடைமுறைகளின்படி மேற்கொள்ளப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

# ரயிலுடன் மோதி ஆட்டோ விபத்து

## ஒருவர் பலி; இருவர் படுகாயம்



(கம்பஹா)

கம்பஹாவில் வல்பொல ரயில் நிலையத்துக்கு அருகில் உள்ள ரயில் பாதையில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் இரண்டு பெண்கள் படுகாயமடைந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இந்த விபத்து நேற்று திங்கட்கிழமை காலை இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பிலிருந்து கொழும்பு கோட்டை நோக்கிப் பயணித்த ரயிலுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின் போது முச்சக்கரவண்டியின் சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன் பின்புறத்தில் அமர்ந்திருந்த இரண்டு பெண்கள் படுகாயமடைந்து சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். இந்த விபத்து தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி)

# சைபர் குற்றங்களுக்கு எதிராக இலங்கையின் அடுத்தகட்ட நகர்வு

(கொழும்பு)

சைபர் குற்றங்களுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் சபையின் மாநாட்டில் இலங்கை கையெழுத்திட்டுள்ளது.

இந்த மாநாடு, சைபர் குற்றங்களுக்கு எதிரான சர்வதேச ஒத்துழைப்பை மேம்படுத்துவதையும் பாதுகாப்பான டிஜிற்றல் சூழலை நிறுவுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இலங்கை சார்பான ஆவணத்தில், டிஜிற்றல் பொருளாதார அமைச்சின் பதில் செயலாளர் வருண ஸ்ரீ தனபால கையெழுத்திட்டுள்ளார்.

இதன்படி, இலங்கை மூன்று மாதங்களுக்குள் அமைச்சுகளுக்கு இடையேயான பொறிமுறை ஒன்றை ஆரம்பிக்கவுள்ளது.

இதனிடையே, இலங்கை கணனி அவசர பதிலளிப்பு பிரிவு தேசிய மையப் புள்ளியாக நியமிக்கப்பட்டுள்ளது. (நி)

# முதல் அரையாண்டில் அரச வருமானம் அதிகரிப்பு

## நிதி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

2025 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் அன்பளிப்புகள் நீங்கலாக அரசாங்கத்தின் மொத்த வருமானம் 2,321.7 பில்லியன் ரூபாயாக அதிகரித்துள்ளதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

இதுகுறித்து நிதி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 1,860.6 பில்லியனாக இருந்த அரச வருமானம், 2025 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் 24.8 சதவீதம் அதிகரித்து 2,321.7 பில்லியன் ரூபாயை எட்டியுள்ளது. அதற்கமைய, 2025 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் வரி வருமானம் 2,151.1 பில்லியன் ரூபாவாக 25.9 சதவீதம் அதிகரித்துள்ளது. இது கடந்த ஆண்டின் முதல் அரையாண்டு காலப்பகுதியில் 1,709.3 பில்லியன் ரூபாவாக காணப்பட்டுள்ளது.

இந்த வரி வருமான அதிகரிப்புக்கு மோட்டார் வாகனங்களுக்கான உற்பத்தி வரி வருமானம், பெறுமதிசேர் வரி வருமானம், சுங்க இறக்குமதி வரிகள், வருமான வரி, விசேட வணிகப் பொருட்கள் மீதான வரிகள், சமூகப் பாதுகாப்பு வரிகள், பெற்றோலியப் பொருட்கள் மூலம் கிடைத்த வரிகள், மதுவரி வருமானம் மற்றும் செஸ் வரி போன்ற பல காரணிகள் முக்கியமாகப் பங்களித்துள்ளன.

# அரசுக்கு எதிரான பேரணியில் நாங்கள் பங்கேற்கமாட்டோம்!

## திலித் ஜயவீர எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

அரசுக்கு எதிரான எதிர்க்கட்சிகளின் பேரணியில் நாங்கள் பங்குபற்றப் போவதில்லை, ஏனெனில் முறையான கொள்கை ஏதும் இல்லாமலே எதிர்க்கட்சிகள் எதிர்வரும் 21 ஆம் திகதி ஒன்றிணைகின்றன என மவ்பிம ஜனதா கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான திலித் ஜயவீர தெரிவித்துள்ளார்.

ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "அரசின் அனைத்து



கொள்கைத் திட்டங்களையும் எதிர்க்கும் நிலைப்பாட்டில் நாங்கள் இல்லை. சிறந்த திட்டங்களுக்கு நாங்கள் நிபந்தனையற்ற வகையில் ஒத்துழைப்பு வழங்குவோம்.

தேசிய தொழிற்றுறையை மேம்படுத்த அரசிடம் எவ்வித திட்டங்களும் கிடையாது. கடந்த அரசு எவ்வாறு செயற்பட்டதோ அதேவகையில்தான் இந்த அரசும் செயற்படுகின்றது.

பெற்றுக்கொண்ட அரச முறைக் கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாத காரணத்தால் தான் நாடு வங்குரோத்து நிலையடைந்தது. இந்த அரசும் கடன் பெறுவதையே பிரதான இலக்காகக் கொண்டுள்ளது. அரசின் செயற்பாட்டை எதிர்க்கும் வகையில் எதிர்க்கட்சிகள் பலமாக இல்லை.

அவர்கள் எதிர்வரும் 21 ஆம் திகதி அரசுக்கு எதிராகப் பேரணியை ஏற்பாடு செய்துள்ளார்கள். இந்தப் பேரணியில் நாங்கள் பங்குபற்றப் போவதில்லை. ஏனெனில் எதிர்க்கட்சிகளிடம் உறுதியான கொள்கை கிடையாது என குறிப்பிட்டுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவம்பர் மாத இராசி பலன்கள்-2025

## பயணங்கள் செல்ல நேரலாம்!



கிரகநிலை - ராசியில் கேது - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் சுக்கிரன் - சுக ஸ்தானத்தில் செவ்வாய் - தைரிய வீரிய ஸ்தானத்தில் சூரியன், புதன் (வ) - களத்திர ஸ்தானத்தில் சனி (வ), ராகு - விரைய ஸ்தானத்தில் குரு என கிரக நிலைகள் உள்ளன.

**பலன்கள்:** இந்த மாதம் தந்தையின் உடல்நிலையில் முன்னேற்றம் காணப்படும். பூர்வீகச் சொத்துக்களில் இருந்த பிரச்சினைகளில் சாதகமான நிலை காணப்படும். தான தர்மம் செய்யவும் ஆன்மிகப் பணிகளில் ஈடுபடவும் தோன்றும். நீண்ட தூரப் பயணங்கள் செல்ல நேரலாம். பயணத்தின் போது கவனம் தேவை. தொழில் வியாபாரம் தொடர்பான பணிகளில் நிதானமான போக்கு காணப்படும். வியாபாரப் போட்டிகள் இருந்தாலும் அதனால் பாதிப்பு இருக்காது.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் கவனமாகப் பணிகளை கவனிப்பது நல்லது. எதிர்பாராத இடமாற்றம் சிலருக்கு உத்தியோக மாற்றம் உண்டாகலாம். குடும்பத்தில் எதிர்பாராத செலவு உண்டாகும். கணவன் மனைவிக்கு இடையே திடீர் மன வருத்தம் ஏற்படலாம். பிள்ளைகளின் செயற்பாடுகள் மனதுக்குத் திருப்தி அளிப்பதாக இருக்கும்.

உறவினர்களிடம் பக்குவமாகப் பேசுவது நல்லது. வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். பெண்களுக்கு எதிர்பார்த்த உதவி கிடைப்பதில் தாமதம் ஏற்படும். மாணவர்களுக்கு தடைகளைத் தாண்டி கல்வியை கற்க செய்யும் முயற்சி வெற்றி பெறும். சிறப்பாக படித்து முடிப்பீர்கள்.

**மகம்:** இந்த மாதம் சாமர்த்தியமான பேச்சின் மூலம் காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள். பணம் வருவது அதிகரிக்கும். வாழ்க்கையில் முன்னேற்றம் காண்பதற்கான வாய்ப்புகள்




வரும். வெளியூர்ப் பயணங்கள் சாதகமான பலன் தரும். மற்றவர்களின் நலனுக்காக வாதாடி வெற்றி பெறுவீர்கள். கௌரவம், அந்தஸ்து உயரும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் உண்டாகும். பழைய பாக்கிகள் வசூலாகும். ஓடர்கள் வருவது திருப்திகரமாக இருக்கும்.

**பூரம்:** இந்த மாதம் உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு இடமாற்றம் உண்டாகலாம். புதிய பொறுப்புகள் கிடைக்கும். நீண்ட நாட்களாக இருந்த பிரச்சினைகள் தீரும். கணவன் மனைவிக்கு இடையே ஒற்றுமை ஏற்படும். பிள்ளைகளின் அறிவுத் திறமை வெளிப்படும். பெண்கள் அடுத்தவர்கள் பிரச்சினையைத் தீர்த்து வைப்பீர்கள். பயணங்கள் சாதகமான பலன் தரும். பொறுப்புகள் கூடும்.

**உத்திரம் 1ஆம் பாதம்:** இந்த மாதம் சற்று எச்சரிக்கையுடன் செயற்படுவது உங்களுக்கு எதிர்காலத்தில் ஏற்பட இருக்கும் பிரச்சினைகளைத் தவிர்க்க வழிவகை செய்யும். அரசியல்வாதிகள் கவனத்துடன் செயற்பட்டால் மேலிடத்தின் நன்மதிப்பைப் பெறுவீர்கள். உங்களிடம் உதவி கேட்டு வருபவர்களை உதாசீனப் படுத்தாதீர்கள். மாணவர்களுக்கு பாடங்களைப் படிப்பதில் திருப்தி உண்டாகும். கல்வி தொடர்பான பயணங்கள் செல்ல நேரிடலாம்.

**பரிகாரம்:** முருகனை வணங்குவது நன்மை தரும்.

**சந்திராஷ்டம தினங்கள்:** 03, 04, 30.

**அதிஷ்ட தினங்கள்:** 11, 12

## வீண் அலைச்சல் குறையும்!



கிரகநிலை - ராசியில் சுக்கிரன்- தைரிய வீரிய ஸ்தானத்தில் செவ்வாய் - தனவாக்கு குடும்ப ஸ்தானத்தில் சூரியன், புதன் (வ) - ரண ருண ரோக ஸ்தானத்தில் சனி (வ), ராகு - லாப ஸ்தானத்தில் குரு - அயன சயன போக ஸ்தானத்தில் கேது என கிரக நிலைகள் உள்ளன.

**பலன்கள்:** இந்த மாதம் வீண் அலைச்சல் குறையும். எடுத்த காரியத்தைச் செய்து முடிப்பதில் தடங்கல் ஏற்பட்டு நீங்கும். தேவையற்ற மனக்கவலை உண்டாகும். வழக்கு விவகாரங்களில் தாமதமான போக்கு காணப்படும். நிர்ப்பந்தமாக வெளியூர்ப் பயணம் செல்ல நேரலாம். தொழில் வியாபாரத்தில் எதிர்பாராத சிக்கல் ஏற்பட்டு பின்னர் சரியாகும். பொருட்களை வாடிக்கையாளர்களுக்கு அனுப்பும்போது கவனம் தேவை.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேலைகளைசரியாக முடிக்க வேண்டுமே என்ற கவலை உண்டாகும். சக ஊழியர்களிடம் கவனமாகப் பேசுவது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களால் வீண் பழி ஏற்பட வாய்ப்பு உண்டு. எதிர்பாராத செலவு உண்டாகும். கணவன், மனைவிக்கு இடையே சிறு சிறு மனஸ்தாபங்கள் வரலாம். பிள்ளைகளின் செயற்பாடுகளில் கவனம் தேவை.

ஆயுதங்களை பயன்படுத்தும் போது கவனம் தேவை. பெண்களுக்குத் தேவையற்ற சில காரியங்களை செய்ய வேண்டி இருந்தாலும் அதன் மூலம் நன்மை உண்டாகும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் காண வேண்டும் என்ற ஆர்வம் உண்டாகும். விளையாட்டுப் போட்டிகளில் திறமை வெளிப்படும்.

**உத்திரம் 2, 3, 4 ஆம் பாதங்கள்:** இந்த மாதம் தானும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும், தன்னுடன் பழகுபவர்களும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கும். நிதானமாகப் பேசுவது காரிய வெற்றிக்கு உதவும். மற்றவர்களின் காரியங்களில் ஈடுபடும் போது கவனம் தேவை. உழைப்பு




வீணாகலாம். எனவே திட்டமிட்டு எதையும் செய்வது நல்லது. தொழில் வியாபாரத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. வாடிக்கையாளர்களை அனுசரித்து நிதானமாகப் பேசுவது நன்மை தரும்.

**அஸ்தம்:** இந்த மாதம் கடனுக்குப் பொருட்களை அனுப்பும் போது எச்சரிக்கை தேவை. உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். மேல் அதிகாரிகளுடன் கவனமாகப் பேசுவது நல்லது. குடும்பத்திற்குத் தேவையான பொருட்களை வாங்குவீர்கள். கணவன், மனைவிக்கு இடையே கருத்து வேற்றுமை உண்டாகலாம். பிள்ளைகளிடம் கோபத்தைக் காட்டாமல் அனுசரித்துச் செல்வது நல்லது.

**சித்திரை 1, 2ஆம் பாதங்கள்:** இந்த மாதம் திட்டமிட்டுச் செய்யும் காரியங்கள் வெற்றிகரமாக முடியும். கோபத்தைக் குறைப்பது நன்மை தரும். கலைத்துறையினருக்கு மிகவும் நன்மை பயக்கும் காலமாக இது அமையும். தொடர் பணிகளால் களைப்படைவீர்கள். வாழ்க்கையின் முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். அரசியல்வாதிகளுக்கு உற்சாகமான காலமாக அமையும். கட்சிப்பணிகளுக்காக கடுமையாக உழைக்க வேண்டி இருக்கும். நேரத்தை வீணாக்காமல் உபயோகப்படுத்திக் கொள்வது புத்திசாலித்தனம்.



**பரிகாரம்:** நவக்கிரகத்தை வணங்கி வர எல்லா கஷ்டங்களும் நீங்கும்.

**சந்திராஷ்டம தினங்கள்:** 05, 06

**அதிஷ்ட தினங்கள்:** 13, 14, 15

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


அருள்மிகு பெருவுடையார் திருக்கோவிலில் மாமன்னர் இராச இராச சோழனின் ஆயிரத்து 40 ஆவது சதய விழா கடந்த 1 ஆம் திகதி சனிக்கிழமை தமிழ்நாட்டில் இடம்பெற்றது. இவ்விழாவில் "ஈழத்திருநாடும் சோழர்களும்" எனும் தலைப்பில் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் உரை நிகழ்த்தினார்.

# பேராயரை சந்தித்தார் வத்திக்கான் அமைச்சர்



(கொழும்பு)

இலங்கைக்கு வருகை தந்துள்ள வத்திக்கான் வெளிவிவகார அமைச்சர் நேற்று திங்கட்கிழமை காலை கொழும்பில் உள்ள பேராயர் இல்லத்தில் பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையைச் சந்தித்து கலந்துரையாடினார்.

நாட்டின் முக்கிய விவகாரங்கள் மற்றும் ரோமன் கத்தோலிக்க திருச்சபையுடன் தொடர்புடைய விடயங்கள் குறித்து இச்சந்திப்பில் பேசப்பட்டதாகத் தெரிகிறது.

வத்திக்கானின் உயர்மட்டத் தலைவர் ஒருவரின் வருகை, இரு தரப்பு உறவுகள் மற்றும் இலங்கையின் தற்போதைய சமூக - அரசியல் சூழ்நிலையில் கத்தோலிக்க திருச்சபையின் பங்கு ஆகியவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. (நி)

# 21 மில்லியன் பெறுமதியான போதைப்பொருளுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

21 மில்லியன் ரூபாவிற்கும் அதிக பெறுமதி கொண்ட "குஷ்" போதைப் பொருளுடன் இலங்கைப் பிரஜை ஒருவரை சுங்க அதிகாரிகள் கைது செய்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

குறித்த சந்தேகநபர் தாய்லாந்தின் பாங்கொக்கிலிருந்து இந்தியாவின் சென்னை வழியாக நாட்டுக்கு வந்துள்ள நிலையில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபரிடமிருந்து 2.7 கிலோ கிராம் குஷ் போதைப்பொருளை சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் இலங்கையைச் சேர்ந்த 28 வயதானவர் என விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

சந்தேகநபர் அவரது பயணப் பைகளுக்குள் மறைத்து வைத்து இந்தப் போதைப்பொருள் தொகையை நாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தநிலையில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# இலங்கை-சவூதி அரேபியா இடையே
## கடல்சார் ஒத்துழைப்பை வலுப்படுத்தும் கலந்துரையாடல்



(கொழும்பு)

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் மற்றும் இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் காலித் பின் ஹமூத் அல் கஹ்தானி ஆகியோருக்கிடையில், கடற்றொழில் அமைச்சில் நட்பு மற்றும் பணிசார்ந்த கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்த சந்திப்பின் போது, இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து கடற்றொழில் மற்றும் மீன்வளத் துறைகளை நவீனமயப்படுத்தும் நோக்கில், தொழில்நுட்ப ஒத்துழைப்பு, முதலீட்டு விரிவாக்கம் மற்றும் அறிவு பரிமாற்றம் போன்ற துறைகளில் உறவுகளை வலுப்படுத்த சவூதி அரேபியா முனைந்துள்ளது. (நி)

## 3ஆம் ஆண்டு சிரார்த்த தின அழைப்பு



தோற்றம்
06 – 03 – 1948

மறைவு
07 – 11 – 2022

கடந்த 07.11.2022 அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவி

**அமரர். இராசரத்தினம் வள்ளியம்மா**

அவர்களின் மூன்றாம் ஆண்டு சிரார்த்த தின நிகழ்வு **04.11.2025** செவ்வாய்க்கிழமை பகல் **12.00** மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

நாவலடி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

தகவல்
குடும்பத்தினர்.

(C-4246)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுவைதீவில் 4 இந்திய மீனவர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து கடற்றொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் நான்கு தமிழக கடற்றொழிலாளர்கள் நேற்றைய தினம் திங்கட்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

எழுவைதீவு கடற்பகுதியை அண்டிய பகுதிக்குள் அத்துமீறி நுழைந்து கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த வேளை சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படையினர், நான்கு கடற்றொழிலாளர்களையும் கைது செய்ததுடன் அவர்களின் படகையும் கைப்பற்றினர்.

கைது செய்யப்பட்ட நான்கு கடற்றொழிலாளர்களையும் அவர்களின் படகையும் காரைநகர் கடற்படை முகாமிற்கு கொண்டு சென்றுள்ள கடற்படையினர், மேலதிக விசாரணையின் பின்னர் நீரியல் வளத்துறை அதிகாரிகள் ஊடாக ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (8-33)

# மேசைப்பந்தாட்டப் போட்டியில் மகாஜனக் கல்லூரி முதல் இடம்



(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை மேசைப்பந்தாட்ட போட்டியில் யா/மகாஜனக் கல்லூரி மாணவர்கள் சி.ஆருயன் 13வயது,15வயது ஆண்கள் பிரிவில் 1 ஆம் இடத்தையும் எம்.தபிஸ்னா 13 வயது பெண்கள் பிரிவில் 1 ஆம் இடத்தையும் பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளார்கள்.

இப்போட்டிகள் இம்மாதம் 1,2 ஆம் திகதிகளில் பண்டாரகம உள்ளரங்க மைதானத்தில் அகில இலங்கை மேசைபந்தாட்ட சம்மேளனத்தின் அனுமதியுடன் Friendship Table Tennis Club ஆல் நடாத்தப்பட்டது. (8)

# வலைப்பந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டம் இன்று

(யாழ்ப்பாணம்)

மாதகல் காந்திஜீ விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ் மாவட்ட அணிகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்ட போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் மற்றும் இறுதியாட்டம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு குறித்த கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

காந்திஜீ விளையாட்டுக் கழகத் தலைவர் அ.நிதர்சன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் ஜெ.றஜீவன், சிறப்பு விருந்தினராக மாதகல் நலன் புரிச் சங்கத்தின் தலைவர் வி.சிற்றம்பலம், கௌரவ விருந்தினர்களாக சமூக சேவையாளர் பூ.அன்பழகன், தமிழ் கொடிக் குழுமத்தின் பணிப்பாளர் திருமதி.டிவனியா, தெல்லிப்பளை பிரதேச செயலக பொருளாதார உத்தியோகத்தர் தயாபரன் ஆகியோரும் கலந்து கொள்வுள்ளனர். (8-90)

# ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் சாதனையாளர் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் சாதனையாளர் கௌரவிப்பு இன்று செவ்வாய்க்கிழமை மதியம் 12 மணியளவில் கல்லூரி ஒரேற்றர் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் ரி.லோகராஜா தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப் பணிப்பாளர் ஜெ.ஜெயச்சந்திரன் கலந்து கொள்ளவுள்ளார். (8)

# ஆண்டு நிறைவு விழாவும் ஸ்தாபக தினமும்

(யாழ்ப்பாணம்)

யாழ். புனிதர் சாள்ஸ் மகா வித்தியாலயத்தின் கல்விப் பணியில் 150 ஆம் ஆண்டு நிறைவு விழாவும் ஸ்தாபக சாள்ஸ் தினமும் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெற உள்ளது .

பாடசாலை அதிபர் கு.லெனின்குமார் தலைமையில் நடைபெற உள்ள நிகழ்வின் முதன்மை விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவியும் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தின் முதன்மை முகாமைத்துவ உத்தியோகத்தருமாகிய திருமதி. மெ.ய.சக்திஜீபன் கலந்து கொள்ளவுள்ளார்.

ஆரம்ப நிகழ்வாக யாழ் மரியன்னை பேராலயத்தில் பழைய மாணவரான அருட்தந்தையரால் காலை 7.45 மணிக்குத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். அதனைத் தொடர்ந்து பாடசாலையில் மாணவர், பழைய மாணவர், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களின் பங்கேற்புடன் சாள்ஸ் தினம் கடைப்பிடிக்கப்படும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (8)

# யா/வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலய பரிசில் நாள்


(யாழ்ப்பாணம்)

யா/வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலய பரிசில்நாள் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் வித்தியாலய பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

வித்தியாலய முதல்வர் கணேசகுலசிங்கம் துஷ்யந்தன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பிரதிக் கல்விப் பணிப்பாளர் (தாபனமும் பொது முகாமைத்துவமும்) சிவசம்பு மதியழகன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக செட்டித்தெரு மெ.மி.த.க பாடசாலை அதிபர் கந்தசாமி சசிகரன், கௌரவ விருந்தினர்களாக யா/ஸ்ரீசோமஸ்கந்த கல்லூரி ஆசிரியர் கனகசிங்கம் எழில்வதனன், யா/புத்த கலட்டி ஸ்ரீ விஸ்னு வித்தியாலய ஆசிரியர் திருமதி.மதிவதனா நடனசபை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (8)

# சட்டவிரோத மீன்பிடி 31 இந்திய மீனவர்கள் கைது



(யாழ்ப்பாணம்)

எல்லை தாண்டி வந்து சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் நேற்றைய தினம் காரைநகர் கடற்பரப்பில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

மூன்று படகுகளில் வந்த 31 இந்திய மீனவர்களே இவ்வாறு சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் அனைவரையும் யாழ்ப்பாணம் மாவட்ட நீரியல்வள திணைக்களத்தினர், கடற்படையினரிடமிருந்து பொறுப்பேற்று, அவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (8)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 300 | 350 |
| உருளைக்கிழங்கு | 210 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 250 | 200 | 300 |
| தக்காளி | 250 | 200 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 280 | 120 |
| கோவா | 180 | 200 | 240 |
| கரட் | 250 | 250 | 250 |
| பூசணி | 80 | 100 | 100 |
| புடோல் | 300 | 200 | 350 |
| வாழைக்காய் | 80 | 100 | 150 |
| சின்ன வெங்காயம் | 200-300 | 300 | 350 |
| பெரிய வெங்காயம் | 180 | 150 | 180 |
| பாகற்காய் | 550 | 500 | 800 |
| வெண்டக்காய் | 250 | 200 | 250 |
| கருணைக் கிழங்கு | 220 | 250 | 300 |
| பயற்றங்காய் | 200 | 150 | 200 |
| லீக்ஸ் | 250 | 250 | 250 |
| பீற்றூட் | 120 | 200 | 160 |
| கறிமிளகாய் | 450 | 500 | 600 |
| முருங்கைக்காய் | 450 | 250 | 300 |
| போஞ்சி | 500 | 600 | 600 |
| கத்தரிதம்புள்ள | 200 | 300 | 300 |
| கீரை – 1 பிடி | 80-160 | 150 | 150 |
| தேசிக்காய் | 1500 | 1600 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 150 | 160-200 |
| இராசவள்ளி | 800 | 600 | 800 |
| வெங்காயப்பூ | 300 | 600 | 400. |
| முள்ளங்கி | 160 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 150 | 60 |
| வல்லாரை | 60 | 100 | 80 |
| [illegible] | 150 | 100 | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2028 ஆம் ஆண்டு அரிசி இறக்குமதி முழுமையாக நிறுத்தப்படும்

## கமத்தொழில் அமைச்சர் தெரிவிப்பு



**(மட்டக்களப்பு)**

**2028ஆம் ஆண்டு வெளிநாடுகளிலிருந்து அரிசி இறக்குமதி முழுமையாக நிறுத்தப்படும் என கமத்தொழில் கால்நடைவளங்கள் காணி மற்றும் நீர்பாசன அமைச்சர் கே.டி.லால்காந்த தெரிவித்தார்.**

மட்டக்களப்பு போரதீவுப் பற்று பிரதேச செயலக பிரிவுக் குட்பட்ட பகுதியில் நவகிரி ஆற்றுக்கான அணைக்கட்டு திறப்பு விழாவின் போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2028ஆம் ஆண்டு நமது உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வெளிநாட்டிலிருந்து அரிசியை இறக்குமதி செய்யும் தேவையை முற்றிலுமாக நீக்க திட்டமிட்டுள்ளோம், இறக்குமதியினால் அதிகளவான பணத்தினை செலவிடுகின்றோம். இந்த நிலைமையினை மாற்றி எமது பகுதியில் உற்பத்திகளை அதிகரித்து இறக்குமதியை தடுப்பதற்கான வேலைத்திட்டங்களை நாங்கள் முன்னெடுத்துள்ளோம்.

நிலையான வளர்ச்சி என்பது நமது ஆறுகளை காப்பாற்ற வேண்டும், கால்வாய்களை காப்பாற்ற வேண்டும், ஏரிகளை காப்பாற்ற வேண்டும், மணலை காப்பாற்ற வேண்டும் என்பதாகும்.

காடுகள் அழிக்கப்பட்டுள்ளன, ஆறுகள் அழிக்கப்பட்டுள்ளன, அனைத்தும் இடிந்து விழுந்துள்ளன, எனவே நான் முன்பு சொன்னது போல் நாம் மகிழ்ச்சியாக வாழ இதை சரி செய்ய வேண்டும், ஆனால் இது ஒரு பெரிய பணி. நாட்டின் பொருளாதாரப் பக்கத்தை நாம் கட்டியெழுப்ப வேண்டும்.

பணம் ஒதுக்கப்பட்டு முறையாகச் செலவிடப்பட வேண்டும். நம்மிடம் அரசியல்வாதிகள், அதிகாரிகள் மற்றும் மக்கள் உள்ளனர். மூவரும் ஒரு நல்ல உணர்வுடன் ஒன்றுபட்டுள்ளனர். நாம் உழைத்தால், குறுகிய காலத்தில் இந்தப் பொருளாதாரம் நமக்குக் கிடைக்கும். சிரமங்களைத் தீர்க்க முடியும்.

போதைப்பொருள் கலாசாரம் அனைத்து இடங்களிலும் வியாபித்து காணப்பட்டது. அது பல்கலைக்கழகங்களும் அந்த நிலையை அடைந்துவிட்டன, அது ஒரு தொற்றுநோய் போல பரவி, சமூகம் சரிந்துவிட்டது. இப்போது அதையும் குணப்படுத்தத் தொடங்கிவிட்டோம். அடுத்து, கலாசார அம்சத்தில் கவனம் செலுத்துவோம் என்று தெரிவித்தார். (நி)

## கெஹெலியவின் குடும்பத்தினர் தாக்கல் செய்த மனுக்கள் தள்ளுபடி



(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவின் குடும்ப உறுப்பினர்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முடக்குவதற்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்டிருந்த உத்தரவை இரத்து செய்து ரிட் கட்டளையை பிறப்பிக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள 3 மனுக்களையும் தள்ளுபடி செய்து உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கெஹெலிய ரம்புக்வெல்லவின் குடும்ப உறுப்பினர்களால் இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

குறித்த மனுக்களுடன் தொடர்புடைய அடிப்படை விடயங்களை ஆராய்ந்த ஜனக் டி சில்வா தலைமையிலான மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாத்தினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கமைய அவர்களின் சொத்துக்களை முடக்குமாறு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. (நி)

## மதுபோதையில் சாரத்தியம் 31 சாரதிகள் கைது!

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது மதுபோதையில் வாகனங்களை செலுத்தியமை தொடர்பில் 31 சாரதிகள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸ் அதிகாரிகள், இராணுவ வீரர்கள், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் கடற்படையினர் ஆகியோர் இணைந்து இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் ஆதாரங்களுடன் 12 பேரும், சந்தேகத்தின் பேரில் 738 பேரும், பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 256 பேரும், திறந்த பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 154 பேரும், கவனக்குறைவாக வாகனங்களை செலுத்தியமை தொடர்பில் 11 சாரதிகளும், ஏனைய போக்குவரத்து விதிமுறைகளை மீறியமை தொடர்பில் 4069 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (நி)


FWC

## தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு

**2025 இல் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் வட மாகாண கல்வி வலயங்களில் முதன்மைச்சித்தி பெற்ற மாணவரை பரிசளித்து கௌரவித்தல்**

மேற்படி பரீட்சையில் கல்வி வலயங்களில் முதலாம் இடத்தைப் பெற்றமையை கௌரவிப்பதற்கு தொண்டைமானாறு தேசிய வெளிக்கள நிலையம் தீர்மானித்துள்ளது.

இந்நிகழ்வில் அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

**காலம்** :- 09.11.2025 ஞாயிறு காலை 10.00 மணி
**இடம்** :- 133, செம்மணி வீதி நல்லூர் யாழ்ப்பாணம்
**தலைவர்** :- கலாநிதி, நாமகள் கிருஸ்ணபிள்ளை
(சிரேஸ்ட விரிவுரையாளர் தாவரவியல் துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
**பிரதம விருந்தினர்** :- திரு. ந.தெய்வேந்திரராஜா
(ஓய்வு நிலை வலயக் கல்விப் பணிப்பாளர் )

**நிகழ்ச்சிகள்**

- மங்கள விளக்கேற்றல்
- மௌன வணக்கம்
- வரவேற்புரை
- தலைமையுரை
- பிரதம விருந்தினர் உரை
- பரிசளிப்பு
- ஏற்புரை
- நன்றியுரை
- மதியபோசனம்

**செயலாளர்**
தேசிய வெளிக்கள நிலையம், தொண்டைமானாறு

(5804)



## சேவை நலன் பாராட்டும் 60 ஆவது அகவை மணிவிழா வாழ்த்தும்



**திருமதி திருமகள் நவநீதகாந்தன்**
(M.A, டிப்ளோமா (S.N.E))

எமது பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்காக நிறைவான சேவையாற்றி 04.11.2025 இன்று ஓய்வு பெறும் ஆசிரியரை வாழ்த்தி அவரது ஓய்வுக்காலம் சிறக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

Best Wishes!

**சேவை விபரம்**

- யா/ஊர்/புனிதமரியாள் றோ.க.மகளிர் வித்தியாலயம் (17.08.1988-01.02.1993)
- கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை (02.02.1993-31.12.1994)
- யாழ்/கலாநிதி அ.தியாகராஜா மகா வித்தியாலயம் (02.01.1995-04.06.1995)
- யா/வளந்தலை தெற்கு எ.எம்.ரீ.எம் பாடசாலை (05.06.1995-31.12.1999)
- யா/பெரியபுலம் மகா வித்தியாலயம் (01.01.2000-09.01.2013)
- யா/கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம் (10.01.2013-22.03.2017)
- யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம் (23.03.2017-01.03.2018)
- யா/உயரப்புலம் மெதடிஸ் மிசன் வித்தியாலயம் (02.03.2018-04.11.2025)

வாழ்த்துவோர்: ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/உயரப்புலம் மெதடிஸ் மிசன் வித்தியாலயம், ஆனைக்கோட்டை.

(5802)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கென்யாவில் நிலச்சரிவு 21 பேர் உயிரிழப்பு!

❖ பலர் காயம்

❖ ஆயிரத்திற்கு மேற்பட்ட வீடுகள் சேதம்

**(நைரோபி)**

**கென்யாவின் ரிஃப்ட் பள்ளத்தாக்கில் ஏற்பட்ட நிலச்சரிவில் 21 பேர் உயிரிழந்துள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**



மேலும், குறித்த நிலச்சரிவில் சிக்கி 30 பேர் வரை காணாமல் போயுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கனமழையால் ஏற்பட்ட இந்த நிலச்சரிவு காரணமாக நாட்டில் பல சாலைகள் மூடப்பட்டுள்ளன.

இந் நிலையில், காயமடைந்தவர்களை மருத்துவமனைகளுக்கு விமானம் மூலம் கொண்டு செல்லப் பேரிடர் மேலாண்மைத் துறை நடவடிக்கை எடுத்துள்ளது.

இதேவேளை, இந்த பேரழிவால் 1,000 இற்கும் மேற்பட்ட வீடுகள் முற்றாக அழிவடைந்திருப்பதாக கூறப்பட்டுள்ளது. (நி)

# தெலுங்கானாவில் லொறி - பேருந்து நேருக்கு நேர் மோதி விபத்து!

## 20 பேர் ஸ்தலத்தில் உயிரிழப்பு



(டில்லி)

தெலுங்கானாவின் ரங்கா ரெட்டி மாவட்டத்தில் நேற்றுக் காலை சரளைக் கற்களை ஏற்றிச் சென்ற லொறியொன்றும் அரசு நடத்தும் வீதிப் போக்குவரத்துக் கழகப் பேருந்தும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது.

இந்தத் துயரச் சம்பவத்தில் மூன்று மாதக் குழந்தை உட்பட குறைந்தது 20 பேர் வரை உயிரிழுந்துள்ளனர். மற்றும் பலர் காயமடைந்துள்ளனர்.

70 பயணிகளுடன் தந்தூர் டிப்போவைச் சேர்ந்த பேருந்து ஹைதராபாத் நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது, எதிர்த் திசையில் இருந்து வந்த லொறியுடன் மோதி இந்த விபத்து நிகழந்துள்ளது.

மோதலின் தாக்கம் மிகவும் கடுமையாக இருந்ததால் லொறியின் சரளைக் கற்கள் பேருந்து மீது விழுந்து பல பயணிகள் கீழே சிக்கிக் கொண்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து நடந்த இடம் மனதைப் பிளக்கும் காட்சியாக இருந்ததாகவும், உள்ளூர்வாசிகள் அவர்களை மீட்க விரைந்து வந்தபோது பயணிகள் உதவிக்காக அலறி அழுததாகவும் நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர். (நி)

# நைஜீரியாவிலுள்ள தீவிரவாதிகளை அழிக்கத் தயாராகும் அமெரிக்கா!



(வோஷிங்டன்)

நைஜீரியாவில் இஸ்லாமியத் தீவிரவாதிகளை அழிக்க இராணுவ நடவடிக்கைக்குத் தயாராகுமாறு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தனது பாதுகாப்புத் துறைக்கு உத்தரவிட்டுள்ளார்.

தீவிரவாதக் குழுக்கள் நைஜீரியாவில் கிறிஸ்தவர்களைக் கொன்று அவர்களுக்கு எதிராக வன்முறையை கட்டவிழ்த்து வருவதாகவும், ஆனால் நைஜீரிய அரசாங்கம் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டதாகவும் ட்ரம்ப் குற்றம் சாட்டியுள்ளார்.

அமெரிக்கத் தாக்குதல்கள் விரைவாகவும் கடுமையாகவும் மாறுவதற்கு முன்பு நைஜீரிய அரசாங்கம் விரைவாக நடவடிக்கை எடுப்பது நல்லது என்று ட்ரம்ப் தனது டுவிட்டர் கணக்கில் ஒரு பதிவில் தெரிவித்துள்ளார்.

நைஜீரியாவிற்கான அனைத்து அமெரிக்க உதவிகளும் நிறுத்தப்படும் என்றும் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

பாதுகாப்புச் செயலாளர் பீட் ஹெக்செத்தும் இந்த உத்தரவை ஏற்றுக் கொண்டு பதிலளித்தார்.

நைஜீரியாவில் இஸ்லாமியத் தீவிரவாதிகளின் தாக்குதல்களால் கிறிஸ்தவர்களும் முஸ்லிம்களும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# ஆப்கானிஸ்தானில் நிலநடுக்கம்

## ரிக்டரில் 6.3 ஆகப் பதிவு; 4 பேர் உயிரிழப்பு

(காபுல்)

ஆப்கானிஸ்தானில் இன்று ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால், இதுவரை 4 பேர் உயிரிழந்தனர். மேலும், பலர் படுகாயம் அடைந்து உள்ளனர்.


ஆப்கானிஸ்தானில் நேற்று சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் இந்துகுஷ் மலைத்தொடர் பகுதியில் பல்ஹா மாகாணம் மசிர் ஐ ஷெரிப் நகரை மையமாக கொண்டு 28 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்டது. ரிக்டர் அளவில் 6.3 ஆகப் பதிவாகி உள்ளது. அதிகாலை நேரத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் கட்டடங்கள் குலுங்கின. வீடுகளில் உறங்கிக் கொண்டிருந்த மக்கள், கட்டடங்கள் குலுங்கியதைக் கண்டு, சாலையில் தஞ்சம் அடைந்தனர்.

நிலநடுக்கம் காரணமாக கட்டடங்கள் இடிந்து விழுந்தன. இதுவரை 4 பேர் உயிரிழந்தனர். மேலும், பலர் படுகாயம் அடைந்துள்ளனர்.

இதுவரை 60இற்கும் மேற்பட்டோர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு உள்ளனர். பல்ஹா மாகாணத்தின் கவர்னர் செய்தி தொடர்பாளர் ஹாஜி ஜைதின் கூறியதாவது, இதுவரை குறைந்தது நான்கு பேர் இறந்தது உறுதி செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

வடக்கு ஆப்கானிஸ்தானை எல்லையாகக் கொண்ட மூன்று நாடுகளான தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான் ஆகிய பகுதிகளிலும் நிலநடுக்கம் உணரப்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆகஸ்ட் மாதத்தில், கிழக்கு ஆப்கானிஸ்தானில் உள்ள மலைப் பகுதிகளில் 6.0 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் பெரிய சேதத்தை ஏற்படுத்தியது. இதனால் இடிபாடுகளில் சிக்கி 2,200 பேர் கொல்லப்பட்டனர். மேலும் ஆயிரக் கணக்கானோர் காயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (நி)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

புத்திசாலிகளைப் போல் சிந்தியுங்கள் ஆனால் சாதாரண நபர்களைப் போல பேசுங்கள்.

– அரிஸ்ரோட்டில்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நேரம் கிடைக்கும்போது அரசியல் செய்யும் நிலைமை

**அரசியல்** என்ற சொற்பதம் இன்று நேற்று உதித்தது அல்ல. சிலப்பதிகாரத்தை தந்தருளிய இளங்கோவடிகள் அரசியல் என்ற சொல்லைத் தனது காவியத்தில் கையாள்கிறார்.

ஆக, அரசியல் என்பது நீண்ட நெடுங் காலத்துக்கு முன்னமே நம் தமிழ் மொழியில் முதன்மை பெற்றுள்ளது.

தவிர, அரசியல் என்பது ஆட்சி அதிகாரத்தினூடு அறத்தைப் பேணுவதாகும்.

இதை நாம் கூறும்போது ஆட்சியாளர்கள் மட்டும் அறத்தைப் பின்பற்றினால் அது போதுமா? என்றால் இல்லை.

அறம் நிலைத்து நிற்பதை உறுதி செய்யும் வகையில் சாமானிய மக்களும் அதற்காகப் பாடுபட வேண்டும்.

ஆம், இங்குதான் ஓர் உண்மை உணரப்படுகிறது – உணர்த்தப்படுகிறது.

அதாவது அரசியல் என்பது அரசியலில் ஈடுபடுபவர்களுக்கு மட்டுமானதல்ல. அது ஒட்டுமொத்த மக்களுக்குமானது.

எனினும் அரசியலில் அனைத்து மக்களும் பங்குபற்றுவதென்பது நடைமுறைச் சாத்தியமற்றது.

ஆகவே அரசியலில் ஈடுபடுகின்ற தரப்புகளில் பொருத்தமானவர்களை மக்கள் தெரிவு செய்து, அவர்களை ஆட்சிப்பீடத்தில் அமரச் செய்கின்றனர். இது பொதுமக்களின் அரசியல் பணியாகிறது. சமகால ஜனநாயக ஆட்சி என்பது இதுவே.

இதற்கு முன்னைய மன்னராட்சியில் மன்னர் பரம்பரை ஆட்சிப் பொறுப்பை ஏற்று செங்கோல் தாங்கி கோன்முறை அரசு செய்தது.

மன்னராட்சியும் அரசியலே. அங்கும் அறத்தைக் காப்பாற்றி நீதி நெறி தவறாது ஆட்சியை மன்னர்கள் வழங்கினர்.

அவ்வாறு மன்னர்கள் அறம் பிழைத்து ஆட்சி செய்வார்களாயின், அதனை மக்கள் எதிர்க்க வேண்டும்.

அதுவே பொதுமக்களின் அரசியல் கடமையாகிறது.

இங்குதான் பாண்டிய மன்னன் அறம் பிழைத்த போது, ஒரு சாதாரண பெண் நீதி கேட்டு மன்னர் சபையில் வாதம் புரிகிறாள்.

தீயவற்றை எரியூட்டுகிறாள். இங்குதான் அரசியலில் – ஆட்சியில் அறம் பிழைத்த போது ஒரு சாதாரண பெண் வெகுண்டெழுந்து நீதியை நிலை நாட்டுகின்ற அரசியல் கடமை நடந்தாகிறது.

இதை நாம் கூறும்போது, நம் நாட்டில் நடந்த **அரகல** போராட்டம் என்பதும் அறத்துக்கான மக்களின் அரசியல் பணியாகும்.

எனினும் எங்கள் தமிழ் இனத்தில் மட்டும் நேரம் கிடைக்கின்ற போது அரசியல் செய்கின்ற அபத்த நிலை காணப்படுகிறது.

இந்த நிலைமையானது எங்கள் இனத்தின் விடுதலைக்கு – வாழ்வுக்கு ஒருபோதும் உறுதுணையாக இருக்கமாட்டாது.

மாறாக, அரசியல் என்பது களைக்காமல் – சளைக்காமல் – சோராமல் களத்தில் நிற்பது. அது வெறும் தேர்தல் களத்தில் நிற்பது மட்டுமல்ல.

### பகிடிவதையால் மரணம்

# வவுனியா பல்கலை மாணவனின் உடற்கூற்று மாதிரிகள் கொழும்பிற்கு

(வவுனியா)

வவுனியா பல்கலைக் கழகத்தில் மரணமடைந்த மாணவனின் உடற்கூற்று மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் திடீர் மரண விசாரணை அதிகாரி லா.சுரேந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை வவுனியா பல்கலைக்கழ்த்தில் மாணவர்களின் மது விருந்து நீண்ட நேரம் இடம்பெற்ற நிலையில் சனிக்கிழமை காலை வவுனியாப் பல்கலைக்கழகத்தில் தகவல் தொழில்நுட்பப்பீடத்தில் முதலாம் ஆண்டில் கல்வி பயிலும் மாணவன் ஒருவர் மரணமடைந்திருந்தார்.

இவ்வாறு உயிரிழந்தவர் அநுராதபுரம் ஜயசிறிபுர பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய மாணவர் ஆவார். குறித்த மாணவனுக்குப் பகிடிவதையின் போது வலுக்கட்டாயமாக மதுபானம் பருக்கியதால் மரணமடைந்துள்ளதாக மாணவனின் உறவினர்கள் குற்றம் சாட்டியிருந்தனர்.

குறித்த விடயம் தொடர்பிலபூவரசன்குளம்பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து இருந்ததுடன் திடீர் மரண விசாரணை அதிகாரி லா.சுரேந்திரசேகரன் அவர்களும் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டார்.

அதன் பின் குறித்த இளைஞனின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட நிலையில் நேற்று வவுனியா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் உடற்கூற்றுப் பரிசோதனைகள் இடம்பெற்றிருந்தது.

இதில் இளைஞனின் மரணத்திற்கான காரணம் முழுமையாக கண்டறியப்படாமையால் அவரது இரத்த மற்றும் உடற்கூற்று மாதிரிகள் மேலதிக பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மாணவர் உயிரிழந்த போது அவரது உடலில் கணிசமான அளவு மதுபானச் செறிவு இருந்திருக்கலாம் எனச் சந்தேகிப்பதாகவும் பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

அத்துடன் விசாரணையின் போது, உயிரிழந்த மாணவரின் சகோதரி கடந்த 31ஆம் திகதி இரவு பல்கலைக்கழக மாணவர்களின் விருந்தொன்றில் சிரேஷ்ட மாணவர்கள் தனது சகோதரருக்கு பலவந்தமாக மதுபானம் வழங்கியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தனது சகோதரனுக்கு வேறு எந்த நோயும் இருந்திருக்கவில்லை என்றும் பல்கலைக்கழகத்தில் இடம்பெறும் பகிடிவதை குறித்துப் பல தடவைகள் குடும்ப உறுப்பினர்களுக்கு தகவல் தெரிவித்ததாகவும் அவர் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,250)

# தோல்விகளைக் கண்டு நாம் ஒருபோதும் அஞ்சப்போவதில்லை

### சட்டத்தரணி மணிவண்ணன் சூளுரை

(யாழ்ப்பாணம்)

இழப்புகளுக்கோ அல்லது தேர்தல் தோல்விகளுக்கோ பயந்தவர்களாக ஒதுங்கிப் போக மாட்டோம். தமிழ் மக்களை ஒரு தேசமாகக் கட்டி எழுப்புகின்ற வரலாற்றுப் பயணத்தை நாம் சரியாக முன்னெடுப்போம் என்று தமிழ் மக்கள் கூட்டணி கட்சியின் உபசெயலாளரும் சட்டத்தரணியுமான மணிவண்ணன் உறுதிபடத் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் கூட்டணி கட்சியின் தலைமைக் காரியாலயம் நேற்றையதினம் (03) யாழ்ப்பாணத்தில் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்ட பின்னர் உரையாற்றுகையிலேயே சட்டத்தரணி மணிவண்ணன் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துரைத்த அவர்,

எமது அரசியல் கட்சியின் செயற்பாடுகள் தொடர்பாகப் பலரும் பலவிதமாகக் கருத்துக்கள் சொல்ல முடியும். ஒரு பலவீனமான அமைப்பாக எமது கட்சியைப் பலரும் விமர்சிக்கக் கூடும்.

ஆனால் தமிழ் மக்கள் கூட்டணி தான் தமிழ் மக்களுடைய எதிர்காலம் என்கின்ற அசைக்க முடியாத செய்தியை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறுகின்றேன்.

2009 ஆம் ஆண்டு வரை இன்னுயிர்களை ஈகம் செய்து தியாகங்களைப் புரிந்து உரிமைக்காகக் களமாடிய அத்தனை உயிர்களின் ஆத்மாக்கள் மீது சத்தியம் செய்தவர்களாகவே நாங்கள் இந்த அரசியல் இயக்கத்தை முன்னோக்கி நடத்திக் கொண்டிருக்கின்றோம்.


வடக்குக் கிழக்கில் எமது தேசம் அங்கீகரிக்கப்பட்டு ஒரு கௌரவமான வாழ்வை இந்த மண்ணில் நிலை நிறுத்தும் வரை எமது அரசியல் இயக்கத்தின் போராட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் என்றார். (ம-7,33)

# செல்வம் எம்.பிக்கு கொலை மிரட்டல்

பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அவர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

கனடாவில் வசிக்கும் நபர் ஒருவரே தொலைபேசியூடாகத் தனக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்ததாக அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (ம-7,33)

வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2025
'தன்னால் அந்த மரத்தின் நிழலில் ஒருபோதும் உட்காரமுடியாது என்று தெரிந்தும் மரங்களை நாட்டும் முதியவர்களைக் கொண்ட சமூகம் மிகப்பாரியளவில் வளர்ச்சியடையும்'

கிரேக்கப் பழமொழி

# இடியன் துப்பாக்கியுடன் குடும்பஸ்தர் ஒருவர் கைது

சட்டவிரோத துப்பாக்கியை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் குடும்பஸ்தர் ஒருவர் உடையார்கட்டுப் பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

புதுக்குடியிருப்பு பொலிஸ் விசேட பிரிவினருக்கு கிடைக்கபெற்ற இரகசியத் தகவலையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற புதுக்குடியிருப்பு பொலிஸார் இடியன் துப்பாக்கியை உடைமையில் வைத்திருந்த குடும்பஸ்தரை கைது செய்துள்ளனர்.

குறித்த சம்பவத்தில் இருட்டுமடுப் பகுதியில் வசிக்கும் 46 வயதுடைய குடும்பஸ்தரே கைது செய்யப்பட்டவராவார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருவதுடன் சந்தேக நபர் விசாரணைகளின் பின்னர் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கல்கியின் பாகம் 4

# பொன்னியின் செல்வன்

## காவியத் தொடர் 901



அதைப் பொருட்படுத்த வேண்டாம். பெண்ணே! இளவரசரை நீ காப்பாற்றியதற்காக இந்தச் சோழ நாடே உனக்கு நன்றிக் கடன்பட்டிருக்கிறது. சக்கரவர்த்தியும் அளவில்லாத மகிழ்ச்சி அடைந்திருக்கிறார். அதற்காக நீ என்ன பரிசு வேண்டுமோ, அதைக் கேட்டுப் பெறலாம். இப்போது, நடந்ததையெல்லாம் சக்கரவர்த்தியிடம் விவரமாகக் கூறு! பயப்படாமல் சொல்லு!" என்றார்.

"முதலில் ஒரு விடயத்தை இந்தப் பெண் சொல்லட்டும். இளவரசரைக் கடலிலிருந்து காப்பாற்றியதாகச் சொல்லுகிறாளே, அவன் இளவரசன்தான் என்பது இவளுக்கு எப்படி தெரியும்? முன்னம் பார்த்ததுண்டா!" என்றார் சக்கரவர்த்தி.

"ஆம், பிரபு! முன்னம் ஈழ நாட்டுக்கு வீரர்களுடன் இளவரசர் கப்பல் ஏறியபோது சில தடவை பார்த்திருக்கிறேன். ஒரு முறை இளவரசர் என்னைச் 'சமுத்திரகுமாரி' என்று அழைத்ததும் உண்டு!" என்று கூறினாள் பூங்குழலி.

"ஆகா! இந்தப் பெண்ணுக்கு இப்போதுதான் பேச்சு வருகிறது!" என்றார் சோழச் சக்கரவர்த்தி.

பின்னர், முதன்மந்திரி அடிக்கடி தூண்டிக் கேள்வி கேட்டதன் பேரில் பூங்குழலி வந்தியத்தேவனை இலங்கைக்கு அழைத்துச் சென்றதிலிருந்து இளவரசரை நாகப்பட்டினத்தில் கொண்டுபோய் விட்டது வரையில் எல்லாவற்றையும் கூறினாள். ஆனால் அநிருத்தர் எச்சரிக்கை செய்திருந்தபடியால் மந்தாகினியைப் பற்றி மட்டும் ஒன்றும் சொல்லவில்லை.

எல்லாம் கேட்ட பின்னர் சக்கரவர்த்தி, "பெண்ணே! சோழ குலத்துக்கு இணையில்லாத உதவி செய்திருக்கிறாய். அதற்கு ஈடாக உனக்குச் செய்யக்கூடியது ஒன்றுமில்லை. ஆனால் ஒன்று கேட்கிறேன், சொல்! கோடிக்கரையில் இளவரசரைக் கரை சேர்ந்த பிறகு இங்கே ஏன் அழைத்து வரவில்லை? ஏன் நாகப்பட்டினத்துக்கு அழைத்துப் போனாய்?" என்றார்.

"சுவாமி! இளவரசர் கொடிய சுரத்தினால் நினைவு இழந்திருந்தார். நாகப்பட்டினம் புத்த விஹாரத்தில் நல்ல வைத்தியர்கள் இருக்கிறார்கள் என்று அங்கே அழைத்துப் போனோம். பிக்குக்கள் இளவரசரிடம் மிக்க பக்தி உள்ளவர்கள் என்பது எங்களுக்குத் தெரியும். இளவரசரை அந்த நிலையில் ஓடத்தில்தான் ஏற்றிப் போகலாமே தவிர, குதிரை மேலோ, வண்டியிலோ ஏற்றி அனுப்ப முடிந்திராது"

"அச்சமயம் கோடிக்கரையில் பழுவேட்டரையர் இருந்தாரே, அவரிடம் ஏன் தெரிவிக்கவில்லை?"

பூங்குழலி சற்றுத் தயங்கிவிட்டுப் பின்னர் கம்பீரமான குரலில், "சக்கரவர்த்தி! பழுவேட்டரையர் இளவரசருக்கு விரோதி என்று நாடெல்லாம் அறிந்திருக்கிறது. அப்படியிருக்க, இளவரசரைப் பழுவேட்டரையரிடம் ஒப்புவிக்க எவ்விதம் எனக்கு மனம் துணியும்?" என்றாள்.

"ஆம், ஆம்! என் புதல்வர்களுக்குப் பழுவேட்டரையர்கள் மட்டுமா விரோதிகள்? நான் கூடத்தான் விரோதி. உலகம் அப்படித்தான் எண்ணிக் கொண்டிருக்கிறது.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## நேர்மையான பிச்சைக்காரர்



(நேற்றைய தொடர்ச்சி)

இதைக் கண்ட மன்னன், "ஆஹா! என்ன கடவுளின் உள்ளம்! ஒரு தவயோகிக்கு செல்வம் தேவை இல்லையாதலால் வைரக் கற்கள் உடைய ரொட்டி அவரிடம் தங்காமல் அந்த ஏழையிடம் சென்று விட்டது என்று நினைத்தான். உடனே அந்த சாமியாரையும் பிச்சைக்காரனையும் பின் தொடருமாறு தன் வேலையாட்களுக்கு உத்தரவிட்டான்.

அன்று மாலையே அவ்விருவரைப் பற்றிய தகவல்களும் மன்னனுக்குக் கிடைத்தன. சாமியார் போல் தோற்றமளித்தவர் தன் வீட்டுக்குச் சென்று பொய்த் தாடியையும், மேலங்கியையும் எடுத்துவிட்டு, ஆசைதீர ரொட்டியை உண்டு விட்டு, பிறகு பழையபடி தாடியை ஒட்ட வைத்துக் கொண்டு சாமியார் வேடத்தில் பிச்சை எடுக்க கிளம்பி விட்டதாக அறிந்தான்.

தன் வீட்டிற்குச் சென்ற பிச்சைக்காரன், தன் மனைவியுடன் ரொட்டியை உண்ணத் தொடங்கியதும் அதற்குள் இருந்த வைரக்கற்களைக் கண்டான். மகிழ்ச்சியில் துள்ளிய அவன் மனைவி அவற்றைத் தாங்களே எடுத்துக் கொள்ள விரும்பிய போது, அந்தப் பிச்சைக்காரன், இந்த வைரக் கற்களைக் கொண்டு கடவுள் என் மனசாட்சியை சோதிக்க விரும்புகிறார்.

இந்த ரொட்டியை அளித்த அரசுப் பணியாளரிடம் இதைப் பற்றிய உண்மையை தெரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறு வைரக் கற்கள் உள்ளிருப்பது அவருக்குத் தெரியாது என்றால், அவருடைய பொருளை அவரிடமே சேர்க்க வேண்டும். ஆனால், தெரிந்தே இவ்வாறு கொடுத்தார் என்றால், இவை அந்தச் சாமியாரைச் சேர வேண்டும். அதுதான் நியாயம்," என்று கூறினான்.

அந்தப் பிச்சைக்காரனின் நேர்மையையும், உயர்ந்த உள்ளத்தையும் அறிந்த மன்னன், அவனை அரண்மனைக்கு அழைத்து அந்த வைரக்கற்களை அவனுக்கே கொடுத்து மேலும் பல பரிசுகளும் வழங்கினான். கடவுளின் அருளால் வைரக் கற்கள் ஒரு போலிச் சாமியாரிடம் சிக்காமல், நேர்மையான ஒரு பிச்சைக்காரனை அடைந்ததை எண்ணி மகிழ்ந்தான் மன்னன். பிச்சைக்காரரும் அதை விற்று கிடைத்த பணத்தில் வியாபாரம் செய்து சந்தோசமாக வாழ்ந்தார். (முற்றும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஹெரோயின்...

படையில் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் குறித்த பெண்ணை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட பெண்ணிடம் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது அவரது உடைமையில் இருந்து 2 கிராம் 500 மில்லி கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது. (ம-7,33)

## இந்தியா...

இந்திய அரசாங்கத்தின் பல உயர் மட்ட அமைச்சர்கள் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகளைச் சந்திக்கவுள்ள தோடு, பல்வேறு உத்தியோகபூர்வ நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளவுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் எனும் வகையில் சஜித் பிரேமதாஸ இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளது இதுவே முதல் தடவையாகும். (ம-7)

## தருமபுரத்தில்...

நேற்று அதிகாலை கிளிநொச்சி மற்றும் தருமபுரம் பொலிஸாரின் தேடுதல் மூலம் குறித்த 42 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட அனைவரையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-7,316)

## கைப்பை...

ஐஸ் போதைப்பொருளுடன் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்றைய தினம் பேருந்துக்காகப் பெண் சிப்பாய் ஒருவர் காத்திருந்த வேளை அவரது கைப்பையைத்திருடிக் கொண்டு சந்தேகநபர் தப்பியோடியுள்ளார்.

கைப்பையினுள் ஒரு பவுண் நகை, பணம் மற்றும் முக்கிய ஆவணங்கள் காணப்பட்ட நிலையில், அது தொடர்பில் சிப்பாய் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் சந்தேகநபர் கொடிகாமம் பகுதியில் பதுங்கியிருப்பதாகக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய, சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸ் குழு சந்தேக நபரைக் கைது செய்தது.

சந்தேகநபரைக் கைதுசெய்த வேளை அவரது உடைமையில் இருந்து ஐஸ் போதைப்பொருளையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபரை யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,33)

## தெல்லிப்பழை...

டும் இயந்திரத்தை ஏற்றி வந்த பாரவூர்தி ஒன்று மோட்டார் சைக்கிளில் பயணித்தவரை மோதித் தள்ளியதில் குறித்த நபர் உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் தெல்லிப்பழைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## ஐஸ் போதைப்...

யாழ்ப்பாணத்தில் வழிப்பறிக் கொள்ளையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் தேடப்பட்டு வந்த நபர் உள்ளிட்ட ஆறு பேர் ஐஸ் போதைப்பொருளுடன் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் ஐஸ் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஆறு பேரைக் கைது செய்து, பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அதன் போது குறித்த ஆறு பேரில் ஒருவர் யாழ்ப்பாண நகர்ப் பகுதியில் இடம்பெற்ற வழிப்பறிக் கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என பதனைக் கண்டறிந்த பொலிஸார் குறித்த நபரிடம் அது தொடர்பில் முன்னெடுத்த மேலதிக விசாரணைகளின் போது கொள்ளையடிக்கப்பட்ட சங்கிலி மற்றும் கொள்ளைக்குப் பயன்படுத்திய இரண்டு மோட்டார் சைக்கிள் என்பவற்றை மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள ஆறு பேரையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து தொடர் விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,33)

## யுத்த காலத்திலி...

கத்தின் கூரைக்கு அடியில் இந்த ஆயுதங்களும் வெடிமருந்துகளும் மீட்கப்பட்டமை குறித்து பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எப்.யூ. வூட்லரிடம் ஊடகவியலாளர்கள் வினவியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், குறித்த ஆயுதங்கள் நீண்டகாலமாக குறிப்பாக யுத்த காலத்தில் இருந்தே அங்கு இருந்திருக்கலாம் எனத் தாம் நம்புவதாக அவர் தெரிவித்தார்.

முன்னதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நூலகத்தின் கூரைக்கு அடியில் ஆயுதங்களும் வெடிமருந்துகளும் கண்டறியப்பட்டதையடுத்து பல்கலைக்கழக நிர்வாகம் கோப்பாய் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியது.

இதனையடுத்து, 31ஆம் திகதி காலை பொலிஸாரும் விசேட அதிரடிப் படையினரும் குறித்த பொருட்களை மீட்டனர்.

அத்துடன், மேலதிக பழுது பார்க்கும் பணிகளின் போது, நூலகத்தின் கூரையின் அருகிலுள்ள ஒரு பகுதியில், மேலும் ஒரு ரி56 ரக துப்பாக்கி, இரண்டு மெகசின்கள், வெடி மருந்துகள் மற்றும் பல மருத்துவ உபகரணங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்த நிலையில், அங்கு மேலும் ஆயுதங்கள் மறைக்கப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிப்பதால் பொலிஸாரும் விசேட அதிரடிப் படையினரும் இணைந்து விரிவான விசாரணையை ஆரம்பித்துள்ளதாக பொலிஸ் பேச்சாளர் எப்.யூ.வூட்லர் தெரிவித்தார். (ம-7)

## அடு...

செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து இதுவரையில் இரண்டு கட்டங்களாக மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணிகளின் போது, 240 மனித என்புக்கூட்டு எச்சங்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் 239 என்புக்கூட்டு எச்சங்கள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளுக்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதையடுத்து மூன்றாம் கட்ட அகழ்வாய்வுப் பணிகளை முன்னெடுப்பது தொடர்பில் ஆராய்வதற்காக யாழ்.நீதிவான் நீதிமன்ற நீதிவான் எஸ்.லெனின்குமார், சட்டவைத்திய அதிகாரி செல்லையா பிரணவன், சட்டத்தரணிகளான நிரஞ்சன், ஞா.ரஜித்தா உள்ளிட்டோர். அடங்கிய குழுவினர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

அதன்போது புதைகுழிக்குள் மழைநீர் தேங்கி நிற்பதனால் அடுத்த அகழ்வுப் பணிகளை மேற்கொள்வது தொடர்பில் எதிர்வரும் ஜனவரி மாதம் 19ஆம் திகதி மீண்டும் அகழ்வுத் தளத்திற்கு விஜயம் மேற்கொண்டு, அடுத்த கட்ட அகழ்வுப்பணிகளை முன்னெடுப்பது தொடர்பில் ஆராயப்படும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம-7,33)


மஹஜன சம்பத — திகதி 2025.11.03 — சீட்டிழுப்பு இலக்கம் 6002 — D 4 3 3 7 5 7
அத சம்பத — D 3 7 5 7 — சீட்டிழுப்பு இலக்கம் 0577
சுப தவசக் — திகதி 2025.11.03 — சீட்டிழுப்பு இலக்கம் 118 — கடகம் 07 58 59
தன நிதானய — திகதி - 2025.11.03 — சீட்டிழுப்பு இலக்கம் - 2032 — C 40 42 57 58 C
மெகா பவர் — திகதி 03/11/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2350 — L 13 11 48 49 65
ஜய — திகதி 2025.11.03 — சீட்டிழுப்பு இலக்கம் 0270 — C 5 5 8 6
கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4244 — சீட்டிழுப்பு திகதி 03.11.2025 — R 12 46 54 73 — R
HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.11.03 — சீட்டிழுப்பு இலக்கம் 1311 — கும்பம் 10 22 24 35 கும்பம்
உத்தியோகபூர்வ முடிவுகள் — 03.11.2025 — வெற்றி வாரம் 0710 — F 1 0 9 5 7 3 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.27,817,916.40
SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2976 — சீட்டிழுப்பு திகதி 2025.11.03 — தினம் திங்கட்கிழமை — 24 26 32 62 R — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.72,188,908.80
சனிதா — திகதி 03.11.2025 — வெற்றி வாரம் 5137 — 28 31 73 76 G — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 64,008,700.40
சசிரி — 0806 — 03.11.2025 — திங்கட்கிழமை — 13 29 35 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00
ராசி — சீட்டிழுப்பு வாரம் 4688 — சீட்டிழுப்பு திகதி 03.11.2025 — தினம் திங்கட்கிழமை — 51 53 56 57 மிதுனம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,573,176.80
கப்ருக — T 09 13 16 20 45 — 2152 — 03.11.2025 திங்கட்கிழமை — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.604,594,264.20
அட கோடிபதி — திங்கட்கிழமை — வெற்றி வாரம் : 2802 — சீட்டிழுப்பு திகதி : 2025.11.03 — 26 60 65 75 K — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.54,719,160.80


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத் தலைமை பொலிஸ் அத்தியட்சகர்

## யாழ்.அரச அதிபருடன் சந்திப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் தலைமை பொலிஸ் அத்தியட்சகர் பாலித செனவிரத்ன யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனை நேற்று (03) காலை 08.30 மணிக்கு அரசாங்க அதிபர் அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இச் சந்திப்பில் யாழ். நகர் பாதுகாப்பு மற்றும் வீதி போக்குவரத்து ஒழுங்குகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன், சட்டவிரோதமான மணல் கடத்தல், திருட்டு மற்றும் போதைப்பொருள் பாவனை என்பவற்றுக்கு எதிராக எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகளை அரசாங்க அதிபருக்குத் தெரியப்படுத்தியதுடன் 11 இடங்களில் போக்குவரத்துக் கண்காணிப்புப் பொலிஸார் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றார்கள் எனவும் இதில் யாழ்.நகரப் பகுதியில் வேம்படிச்சந்தி, ஸ்ரீ நாக விகாரைச்சந்தி, மின்சார நிலைய வீதிச் சந்தி மற்றும் காங்கேசன்துறை வீதிச் சந்தி என்பவற்றில் நிரந்தர கண்காணிப்பில் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றார்கள் என்றும் தலைமைப் பொலிஸ் அத்தியட்சகரால் தெரிவிக்கப்பட்டது.

மேலும் பொதுமக்களுக்கான 24 மணித்தியால "அவசர பொலிஸ் பிரிவு" நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் 021 222 2221 எனும் புதிய அவசர தொலைபேசி இலக்கத்திற்கு பொது மக்கள் தொடர்பு கொள்ள முடியும் எனவும் தலைமை பொலிஸ் அத்தியட்சகரால் அரசாங்க அதிபருக்கு தெரிவிக்கப்பட்டது. (ம-7)


பணியாளர் வெற்றிடம்

- மின்சார உபகரணங்கள், நீர் குழாய்கள் விநியோகத்திற்கு வாகன சாரதி (AD)
- ஆங்கில அறிவுடன் கூடிய களஞ்சிய காப்பாளர் (ஆண்)
- விநியோக பணியாளர்கள் (ஆண்கள்)

➢ முன் அனுபவம் விசேட தகைமையாகக் கொள்ளப்படும்.
➢ முன் அனுபவம் உடையவர்களுக்கு விசேட கொடுப்பனவு வழங்கப்படும்.

☞ EPF/ETF கொடுப்பனவு வழங்கப்படும்
☞ நிரந்தரத் தொழில்.

சுயவிபரக்கோவையை நேரில் வருகை தந்து சமர்ப்பிக்கவும். (5807)

ESS JEY ELECTRICALS,
No.09, STANLEY ROAD. JAFFNA.
021 222 2564 / 021 222 7430



யாழ்ப்பாணத்தில் Voyzant
விசாக்கள்
இந்தியா, அமெரிக்கா, கனடா, லண்டன், பிரான்ஸ், ஜேர்மனி, நோர்வே, ஹொலன்ட், டென்மார்க், பெல்ஜியம், மலேசியா, நியூஸ்லாந்து, அவுஸ்திரேலியா, சீனா போன்ற நாடுகளிற்கு விசா சேவைகள்





மேலதிக விபரங்களுக்கு: Voyzant(PVT)Ltd
No:617&619, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
(OLR Church இற்கு அருகில்)
+94763458646, 021 222 6866 (5725)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127




கனடா - வரி இல்லாமல்
விரைவு பொதிகள் சேவை
5-9 Kg 3670/-
11-16 Kg 2640/-
21-27 Kg 2440/-
✓ குறைந்த விலை -நிறைந்த சேவை
✓ கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
✓ 14 நாட்களில் Delivery (C-4248)
UK 11Kg - 1390/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2480/- | Australia 11Kg - 2150/- | Italy 11Kg - 2270/-
எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை
V2 TRAVELS 076 822 6241 076 822 6237



வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-4249)
076 825 7716 (ஆகாஸ்)


# மரண அறிவித்தல்



தோற்றம் 28.08.1932 | மறைவு 02.11.2025

## முருகேசு கமலவேணி

### (வடஅல்வை முருகேசனாரின் மனைவி)

அல்வாய் வடக்கு, குச்சம், சித்தார்த்தர் அகம் இனைப் பிறப்பிடமாகவும் ஆனந்தகானம் ஆவரங்கால் புத்தூரை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு கமலவேணி அவர்கள் கடந்த (02.11.2025) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வட அல்வை முருகேசனார் (முன்னாள் அதிபர் - அல்வாய் வடக்கு ஸ்ரீலங்கா வித்தியாசாலை, புத்தகலட்டி ஸ்ரீ விஸ்ணு வித்தியாலயம்) அவர்களின் மனைவியும் திருமதி இந்திராவதி (இங்கிலாந்து), கந்தவரோதயன் (சுவிஸ்லாந்து), ராஜவரோதயம் (அதிபர்), இந்திரோதயன் (பொறியியலாளர் - இங்கிலாந்து) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற சி.தங்கத்துரை (இ.போ.ச) மற்றும் திருமதி இந்திராதேவி ஆகியோரின் சிறிய தாயாரும் காலஞ்சென்ற கலாநிதி காரை.செ.சுந்தரம்பிள்ளை, இராஜேஸ்வரி மற்றும் மஞ்சுளா, கௌதமி, வாணிலக்ஷ்மி (இங்கிலாந்து), முருகதாஸ் (ஆசிரியர்) ஆகியோரின் மாமியாரும் கௌசல்யா சத்தியலிங்கம், மாதவி சிவலீலன், பூங்குன்றன், திருப்பரங்குன்றன், தமிழரசி விஷ்ணுபிரசாத், தமிழாரணி, சித்தார்த்திகா, நிருதிகன், சாதுரிகன், மஞ்சரி, மகதி, கேசவன், சபேசன், வாகீசன், ஆனந்தி, ராதிகா ரஜீவன், ஐங்கரன், தர்ஷிகா சித்தார்த் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.11.2025) புதன்கிழமை காலை 06 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 10 மணியளவில் ஆவரங்கால் கிழக்கு கவுடுது இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"ஆனந்தகானம்"
ஆவரங்கால்
புத்தூர்.

தகவல் :
குடும்பத்தினர்
077 605 7836

(5810)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.11.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org